**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 23/2022</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| **தேதி** | **–** | **10.09.2025** |
| **பெயர்** | **–** | **ஹரிதாஸ்** |
| **த/பெ** | **–** | **தேவராஜ்** |
| **சாட்சி** | **–** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.42.p.m**

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

17. நான் கடைசியாக தாக்கல் செய்த வா.சா.ஆ 26 எஸ்.எல்.ஆர் நகல் பழைய சர்வே எண் 209/பா என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதன் வகைபாடு சர்க்கார் புறம்போக்கு கிராமநத்தம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் கிராமநத்தம் என்று குறிப்பிட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 26 ஆவணத்தில் பத்தி 3 மற்றும் 4 ம் 'ச', 'புற' என குறிப்பிட்டுள்ளது என்றால் அதற்கான அர்த்தம் எனக்கு தெரியாது. அதன் அர்த்தம் சர்க்கார்மற்றும் புறம்போக்கு வகைப்பாடு என்றால் சரியல்ல.

18. 209/பா–வின் 3 உட்பிரிவுகள் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதில் 511/13 தான் என்னுடைய சொத்து. அதன் பழைய சர்வே எண் 209/பா. சர்வே எண் 511/14 –ல் உரிமையாளர் குழந்தைரெட்டியார் மகன் இராஜாமணி என்று உள்ளது என்றால் சரிதான். அது பழைய பதிவேடு மேற்சொன்ன இராஜாமணி அந்த சொத்தை எனக்கு விற்பனை செய்துவிட்டார். சர்வே எண் 511/14 இந்த தாவாவில் வழக்கு சொத்தாக உள்ளது.

19. மேற்சொன்ன சர்வே எண் 511/13 ல் உரிமையாளர் பெரியஎல்லப்பரெட்டியார் மகன் தேவராஜ் என குறிப்பிட்டுள்ளது எனது தந்தை. அதன் வகைப்பாடு காலி மனை என்று குறிப்பிட்டுள்ளது என்றால் அதில் மாட்டுக்கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. சர்வே எண் 511/14 ல் கூரை வீடு என குறிப்பிட்டுள்ளது என்றால் அது பழைய பதிவேடு, அதில்

கூரைவீடு இருந்ததா என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்சொன்னவாறு இராசஜாமாணியிடம் அந்த சொத்தை நான் வாங்கி அனுபவித்து கொண்டு வருகிறேன். பட்டாவும் எனது பெயரில் மாற்றப்பட்டுவிட்டது.

20. வா.சா.ஆ 26 ஆவணத்தில் சர்வே எண் 511/14 ல் இராஜாமணி பெயரில் பட்டா உள்ளது என்றும் அதன் எண் 197 என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். நான் இராஜாமணியிடமிருந்து எப்போது கிரையம் பெற்றேன் என்றால் 2007 மற்றும் 2019 ல் கிரையம் பெற்றேன். வா.சா.ஆ 6 ஆவணத்தில் 2007−ல் நான் கிரையம் பெற்றதாக கூறும் கிரையப்பத்திரத்தில் பட்டா எண் 196 என குறிப்பிட்டுள்ளது என்றால் அது தட்டச்சு பிழையாக கூட இருக்கலாம்.

21. நான் பிழைக்காக திருத்தல் ஆவணம் எதுவும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 6 ஆவணத்தில் சொத்து விவரத்தில் கூட பட்டா எண் 196 என்று தான் உள்ளது என்றால் அதுவும் பிழையாக இருக்கலாம். இராஜாமணியிடமிருந்து 09.05.2019 ல் வேறு ஆவணம் எண் 1900/2019 ஏற்படுத்தி உள்ளோம் என்றும் அது வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கோமதி மற்றும் என் பெயரில் கிரையம் பெற்ற சொத்துகளில் சுமார் ¼ செண்ட் மற்றும் ½ செண்ட் என்றால் 66 சதுர மீட்டர் ஆகும். அது தோராயமாக 1 ½ செண்ட் ஆகும்.

22. மேற்சொன்ன சர்வே எண்களுக்கு நான் வாங்கிய பட்டா அனைத்தும் தோராய பட்டா என்றால் சரியல்ல. இராஜாமணி பெயரில் உள்ள பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என் பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். நான் 2019 ல் இராஜாமணியிடம் கிரையம் பெறும் போது அவரிடம் தோராய பட்டா இருந்ததா அல்லது ரெகுலர் பட்டா இருந்ததா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. பட்டா அவர் பெயரில் தான் இருந்தது.

23. தோராய பட்டா எந்த காலத்திலும் உரிமையை பறைசாற்றாது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இராஜாமணி மீது உரிமை மூலமான ஆவணங்கள் எதையும் பரிசீலிக்காமல் நான் மோசடியாக கிரைய பத்திரம் ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த பட்டா அவருக்கு எப்போது கொடுத்தார்கள் என்று இராஜாமணியிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. அவர் பெயரில் பட்டா உள்ளதை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் கிரையம் பத்திரம் ஏற்படுத்தும்போது தெரிந்த கொண்டேன்.

24. மேற்சொன்ன பட்டாவை அவரிடம் இருந்து வாங்கிய பிறகு தான் கிரையம் பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம். அந்த பட்டாவினை இந்த

நீதிமன்றத்தில் உண்மை சங்கதிகளை மறைக்கும் எண்ணத்தினால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அதை தாக்கல் செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியாது. தற்போது அந்த பட்டாவை நீதிமன்றத்தில் கேட்கும் பட்சத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தாக்கல் செய்ய இயலாது. மேற்படி பட்டா யாரிடம் உள்ளது என்றால் இராஜாமணியிடம் தான் உள்ளது. தற்போது சாட்சி மாற்றி அவரிடம் உள்ளதா, இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது என்று கூறுகிறார்.

25. நான் கிரையம் பெறும்போது அசல் பட்டாவை பார்க்காமலும், வாங்காமலும் உரிமை மூலம் அவர் பெயரில் உள்ளதை உறுதிப்படுத்தாமலும் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

**( மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 01.22.p.m.**